சேலம் மத்திய மாவட்டம் மாநகராட்சி 11 மற்றும் 29வது கோட்டங்களில் 8-வது நாளாக பொதுமக்களிடம் அடிப்படை கோரிக்கைகளை கேட்டு வீதி, வீதியாகச் சென்று மாவட்டக் கழகச் செயலாளர் இரா. இராஜேந்திரன் எம்.எல்.ஏ. கோரிக்கை மனுக்களைப் பெற்றார். உடன் மாநகராட்சி மேயர் ஏ.ராமச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் ஜிந்துஜா, பகுதிச் செயலாளர்கள் சி.பிரகாஷ், மனமேடு டி.மோகன், கே.டி.ஆர். தனசேகரன், மாநகராட்சி அதிகாரிகள் இருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த கல்யாணகுமார் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வெங்கடேஷ் உட்பட பலர் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த காளிதாஸ் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வெங்கடேஷ் மற்றும் மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் உட்பட பலர் உள்ளனர்.

‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தை மக்களிடத்தில் திண்ணைப் பிரச்சாரம் செய்து

கழகத் தலைவரின் சாதனைகளை கிராமங்கள்தோறும் கொண்டு செல்வோம்!

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்! மாவட்டப் பொறுப்பாளர் ப.சேகர் அறிவிப்பு!

திண்டிவனம், ஆக. 2 - விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் ‘மக்களுடன் முதல்வர்’ திட்டத்தை மக்களிடத்தில் திண்ணைப் பிரச்சாரமாக செய்து கழகத் தலைவரின் சாதனைகளை ஒவ்வொரு கிராமம் தோறும் கொண்டு செல்வது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் ஏற்பாட்டில் நடைபெற்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்திற்கு மாவட்ட அவைத் தலைவர், அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கினார்.

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் திண்டிவனத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர் ஏற்பாட்டில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் மாவட்டப் பொருளாளர் ரமணன் அனைவரையும் வரவேற்றார். மாவட்ட துணைச் செயலாளர்கள் மரக்காணம் ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், அருணகிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத் தலைவரும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், முரசொலி மாறன், இனமான பேராசிரியர் ஆகியோரின் திருஉருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தொடர்ந்து சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் தலைமை தாங்கி, பேசுகையில்,

நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆரணி நாடாளுமன்ற உறுப்பினர் தரணி வேந்தன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் துரை ரவிக்குமார் ஆகியோர் வெற்றி பெற உழைத்திட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், மாவட்டக் கழகத்தின் சார்பாக நன்றிகளையும் பாராட்டுகளையும்,

அதேபோல் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் வெற்றி பெற்ற அன்னியூர் சிவாவின் வெற்றிக்கு உழைத்திட்ட விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கும், மாவட்டக் கழகத்தின் சார்பாக நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்தும்

விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் செயல்வீரர்கள் கூட்டம் நடத்துவது.

மக்களுடன் முதல்வர் திட்டத்தை மக்களிடத்தில் தின்னைப் பிரச்சாரமாக செய்து கழகத் தலைவர் அவர்களின் சாதனைகளை ஒவ்வொரு கிராமம் தோறும் கொண்டு செல்லவேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து புதியதாக பொறுப்பேற்றுள்ள விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகரிடம் அமைச்சர் செஞ்சி மஸ்தான் தீர்மான புத்தகத்தை வழங்கி, சால்வை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்தார்.

இதை அடுத்துசெஞ்சி, மயிலம், திண்டிவனம், தொகுதி தேர்தல் பொறுப்பாளராக பணியாற்றிய பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர் ஆகியோருக்கு அமைச்சர் செஞ்சி மஸ்தான் சால்வை அணிவித்து, வாழ்த்துத் தெரிவித்தார்.

கூட்டத்தில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, செயற்குழு உறுப்பினர்கள் விஜயகுமார், நெடுஞ்செழியன், சீனி ராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் கதிரேசன், மணிவண்ணன், வீடூர் ரவி, பாலகிருஷ்ணன், சாந்தி ஏழுமலை, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் சொக்கலிங்கம், அண்ணாதுரை, ராஜாராமன், தயாளன், பழனி, ரவிச்சந்திரன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பச்சையப்பன், விஜயராகவன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், பேரூர்ச் செயலாளர்கள் கார்த்திக், சம்பத், மாவட்ட அணி அமைப்பாளர்கள் ஆனந்த், எம்.எல்.பி. கோபிநாத், ராஜசக்தி, கே.செந்தில்குமார், ப.செந்தில்குமார், கோ.தமிழரசன், சந்திரன், திலகவதி, எஸ்.ராஜா, ரோமியன், காதர் நவாஸ், திண்டிவனம் நகர மன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், செஞ்சி பேரூராட்சி மன்றத் தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், அனந்தபுரம் பேரூராட்சி மன்றத் தலைவர் முருகன், துணை சேர்மன்கள் ஜெயபாலன், அமுதா கல்யாண் குமார் உள்ளிட்ட மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திண்டிவனம் நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன் நன்றி கூறினார்.

“கலைஞர் கனவு” இல்லம் திட்டத்தில் – முதற்கட்டமாக

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 3,000 வீடுகள் ஒதுக்கிய முதல்வருக்கு நன்றி!

மாவட்டக் கழக செயற்குழுவில் தீர்மானம்!

மயிலாடுதுறை, ஆக. 2 - மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் மாவட்டக் கழக அலுவலகத் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் தலைமையில் சீர்காழி சட்டமன்றத்தில் கலைஞர் அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் கூட்டத்தின் நோக்கம் குறித்தும், கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட உள்ள தீர்மானங்கள் குறித்தும் மாவட்டச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் பேசினார்.

கூட்டத்தில் மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர் ஜெக.வீரப்பாண்டியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் கொள்ளிடம் மேற்கு செல்ல. சேதுரவிக்குமார், கொள்ளிடம் கிழக்கு மலர் விழிதிருமாவளவன், மயிலாடுதுறை வடக்கு என். இளையபெருமாள், மயிலாடுதுறை மத்தியம் ஞான. இமையநாதன், மயிலாடுதுறை கிழக்கு ப.முருகமணி, மயிலாடுதுறை மேற்கு மூவலூர் மூர்த்தி, செம்பனார்கோயில் வடக்கு பி.எம்.அன்பழகன், செம்பனார்கோயில் தெற்கு எம்.அப்துல்மாலிக், செம்பனார்கோயில் மத்தியம் அமிர்த.விஜயகுமார், குத்தாலம் கிழக்கு மங்கை எம். சங்கர், குத்தாலம் வடக்கு கு.வைத்தியநாதன், குத்தாலம் மேற்கு ஏ.ஆர்.ராஜா, சீர்காழி மேற்கு ஏ.ஜி. ஜெ.பிரபாகர், சீர்காழி கிழக்கு பஞ்சுகுமார்,

தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், நகரக் கழகச் செயலாளர்கள் மயிலாடுதுறை குண்டாமணி (எ) என்.செல்வராஜ், சீர்காழி ம. சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.வெற்றிவேல், பி.சிவதாஸ், நத்தம் வின்செண்ட், காந்தி, சுபா நெடுஞ்செழியன், எஸ்.சங்கரநாராயணன், ஜெ.கபிலன், ஹர்சத்,பேரூர் கழகச் செயலாளர்கள் வைத்தீஸ்வரன்கோயில் எம்.அன்புச்செழியன், குத்தாலம் எம்.சம்சுதீன், தரங்கம்பாடி முத்துராஜா, மணல்மேடு அண்ணாதுரை, மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் எம்.கே. மருது, வி.எஸ். என்.செந்தில், ஆர்.எஸ். ஸ்ரீதர், இரா.மனோகரன், மைத்தி, ராஜ்குமார், பெருவீரமணி, தீபா சத்தியேந்திரன், வி.எஸ்.பிரபாகரன், வெடிபாலமுருகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 2024 நாடாளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெறாத ஒன்றிய பா.ஜ.க. அரசு நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்த ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தங்கள் ஆட்சியை காப்பாற்றிக் கொள்வதற்காக சில மாநிலங்களுக்கு மட்டும் நிதியை தாராளமாக அள்ளிக் கொடுத்தும், நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகித்து வரும் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் மீது வன்மத்தை கக்கிடும் வகையில் இந்த ஆண்டின் ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழகத்திற்கு மெட்ரோ ரயில் திட்டத்திற்கான நிதி, தமிழ்நாடு சந்தித்த இரண்டு தொடர் பேரிடர் இழப்புகள் ஆகியவற்றிற்கு நிதி வழங்கிட வேண்டுமென்று முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை முற்றிலும் புறக்கணித்து, சில மாநிலங்களுக்கு மட்டும் பேரிடர் நிதி அள்ளி வழங்கப்பட்டுள்ளது. பா.ஜ.க. ஆட்சி செய்யாத மாநிலங்களை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் பார்க்கும் பாசிச பா.ஜ.க. அரசை வன்மையாக கண்டனத்தை தெரிவித்துக் கொள்வது என்றும்,

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியின் மக்கள் நலத்திட்டத்தால் தொகுதி வாக்காள பெருமக்கள் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்த வாக்காளர்களுக்கும், வெற்றிக்கு வித்திட்ட முதலமைச்சர், கழகத்தலைவர் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் அமைச்சர் பெருமக்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் மயிலாடுதுறை மாவட்டத்திற்கு என்று ஒதுக் கப்பட்ட விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் ஆசூர் ஊராட்சி பாகம் எண்கள் 200, 201, 202 ஆகியவற்றில் அதிக வாக்குகள் பெற உழைத்திட்ட மயிலாடுதுறை மாவட்டத்தில் இருந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுப்பட்ட அனைத்து கழகத்தினருக்கும் நன்றியை தெரி வித்துக் கொள்வது என்றும்,

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சியின் போது தமிழகத்தில் உள்ள அனைத்து கூரை வீடுகளையும் கான்கிரீட் வீடுகளாக மாற்றிட வேண்டும் என்று அனைத்து கூரை வீடுகளுக்கும் கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தில் வீடு கட்டிக் கொள்ள ஆணை வழங்கிய நிலையில் ஆட்சி மாற்றத்தின் காரணமாக திட்டம் கிடப்பில் போடப்பட்ட நிலையில் தமிழ்நாட்டின் முதலமைச்சராக , கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பு ஏற்ற பின் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் கனவை நனவாக்கும் வகையில் தமிழகத்தில் உள்ள அனைத்து கூரை வீடுகளையும் கலைஞர் கனவு இல்ல திட்டத்தின் கீழ் ரூ. 3,50,000 மதிப்பில் கான்கிரீட் வீடுகளாக மாற்ற திட்டம் கொண்டு வந்து இந்த ஆண்டுக்கு மயிலாடுதுறை மாவட்டத்திற்கு 3000 வீடுகள் கட்ட ஆணை வழங்கியும் அதற்கு ரூ. 105 கோடி நிதியை ஒதுக்கி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. சார்பில் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்வது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

விழுப்புரத்தில் ஆர்ப்பாட்டம்: கனிமொழி என்.வி.என்.சோமு கண்டன உரை!

டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமை! டாக்டர் ப.சேகர் முன்னிலை!

விழுப்புரம், ஆக. 2 - கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க, ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் மாற்றாந்தாய் போக்குடன் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க ஒன்றிய அரசைக் கண்டித்து விழுப்புரம் தெற்கு மாவட்டம் மற்றும் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழக பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கலந்துகொண்டு கண்டன உரையாற்றினார். சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் இரா.இலட்சுமணன், அன்னியூர் சிவா, நாடாளுமன்ற மன்ற உறுப்பினர் துரை.ரவிக்குமார், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், இரா.கற்பகம், மாவட்ட ஊராட்சி குழு துணைத் தலைவர் மு.தங்கம், மகளிர் அணி பிரச்சார குழுச் செயலாளர் தேன்மொழி, விழுப்புரம் வடக்கு மாவட்ட நிர்வாகிகள். மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மாசிலாமணி, செந்தமிழ் செல்வன், சேது நாதன், சீத்தாபதி சொக்கலிங்கம் மாவட்ட பொருளாளர் என்.ரமணன், மாவட்டத் துணைச் செயலாளர்கள் அருணகிரி, ரவிக்குமார், அமுதா ரவிக்குமார், இளைஞர் அணி அமைப்பாளர்கள் செ.தினகரன், கண்ணன் ஆனந்த் உள்ளிட்ட பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

சோ.பா.மலர்வண்ணன் ஏற்பாட்டில்

கச்சநகரம் ஊராட்சியில் அ.தி.மு.க. - பா.ம.க.வினர் 46 பேர் கழகத்தில் இணைந்தனர்!

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையில்

நாகை, ஆக. 2 – நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியம் கச்சநகரம் ஊராட்சியில் இருந்து அ.தி.மு.க., பா.ம.க., கட்சிகளைச் சேர்ந்த 16 குடும்பங்களைச் சேர்ந்த 46 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் இணையும் நிகழ்ச்சி நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கீழையூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் சோ.பா. மலர்வண்ணன் ஏற்பாடு செய்திருந்தார்.

கிளை கழகச் செயலாளர்கள் மேலகச்சநகரம் ஜி.ஞானசேகரன், கிழ கச்சநகரம் வி.சிங்காரவேல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய துணைச் செயலாளர் ஆர்.சுரேஷ் வரவேற்றார். நிகழ்ச்சியில் அ.தி.மு.க. கச்சநகரம் கிளைச் செயலாளர் எஸ்.சத்திவேல், பா.ம.க. கிளைச் செயலாளர் ஜி.ராமகிருஷ்ணன் ஆகியோர் தலைமையில் அ.தி.மு.க., பா.ம.க. ஆகிய கட்சிகளில் இருந்து 16 குடும்பத்தைச் சேர்ந்த 46 பேர் அக்கட்சிகளில் இருந்து விலகி நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இருவண்ண கைத்தறி ஆடை அணிவித்து கழகத்தில் இணைத்து கொள்ளப்பட்டது. நிகழ்ச்சியில் முத்தரசபுரம் கிளை செயலாளர் டி.செந்தில்குமார், இளைஞர் அணி விக்னேஷ், நிர்வாகிகள் கண்ணதாசன், ஆறுமுகம், பாஸ்கர் உள்ளிட்ட பலர் உலந்து கொண்டனர்.

முடிவில் ஒன்றிய பிரதிநிதி எஸ். மணிகண்டன் நன்றி கூறினார்.

புதுக்கோட்டை சாணக்கியன் அகாடமியின் 2 ஆம் ஆண்டு பட்டயச்சான்று வழங்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர், வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் ஆலங்குளம் வீட்டு வசதி குடியிருப்பு அருகே நடைபெற்றது. தற்காப்புக் கலைகளான கராத்தே, சிலம்பம் உள்ளிட்ட கலைகளில் தேர்ச்சி பெற்ற மாணாக்கர்களுக்கு பதக்கம் மற்றும் சான்றிதழ்களை மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் வழங்கினார்.

தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

தூத்துக்குடி மாநகரம், திரேஸ்புரம் பகுதி, 25வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், திரேஸ்புரம் பகுதி, 25வது வட்டச் செயலாளர் எஸ். அந்தோணிசாமி (எ) அண்டோ அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக திரு. **ஜேம்ஸ் ரோலண்ட்.** (30, வடக்கு ராஜா தெரு, தூத்துக்குடி 1.) அவர்கள் 25வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 31.07.2024

துரைமுருகன்
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறை சார்பில், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அம்மையார் அவர்களின் 139வது பிறந்தநாளினை முன்னிட்டு, அவரது திருவுருவச் சிலைக்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.அருணா, 30.07.2024 அன்று மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை. முத்துராஜா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி பா.ஐஸ்வர்யா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருமதி க.பிரேமலதா, அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் (பொ) மரு. ஜி.ஏ.ராஜ்மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.